செய்தி வெளியீடு எண்.413 நாள் 9.11.2006

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்து செய்தியாளருக்கு அளித்த பேட்டி

தலைமைச் செயலகத்தில் அமைச்சரவை கூட்டம் இன்று நடைபெறுவதற்கு முன்பு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை பற்றிய கூட்டம் முதலமைச்சர் அறையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர், உள்துறை செயலாளர், பொதுத் துறை செயலாளர், காவல் துறை தலைவர், காவல் துறை கூடுதல் தலைவர் (சட்டம் ஒழுங்கு), காவல் துறை கூடுதல் தலைவர் (நுண்ணறிவுத் துறை), சென்னை மாநகர காவல் துறை ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்தக் கூட்டம் பற்றி "இந்து" நாளிதழின் செய்தியாளர் முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்து, இன்று திடீரென்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தின் முக்கியத் துவம் என்ன என்று கேட்ட போது, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறியதாவது:–

"இன்றைய தினம் வெளி வந்த உங்கள் "இந்து" நாளிதழிலே உள்ள சட்டம் ஒழுங்கு பிரச்சினை மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கை பற்றிய செய்தியைப் படித்தவுடன், அதிலே உள்ள கருத்துக்கள் என்னுடைய எண்ணத்திலும் இருந்ததினால் இந்தக் கூட்டம் இன்று அவசரக் கூட்டமாக கூட்டப்பட்டது. அப்போது பத்திரிகையிலே வந்துள்ள சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்து விரிவாக விவாதித்தேன். காவல் துறை பணியாளர்களின் எண்ணிக்கை சென்னை மாநகரத்திலே அதிகப்படுத்த வேண்டும், அதாவது வேலைகளைப் பகிர்ந்து கொண்டு காவல் துறையின் செயலாக்கத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கூறினேன். முக்கிய சென்னை மாநகரம் பற்றியும், மற்றும் சென்னை போன்ற முக்கியமான இடங்களில் (Vulnerable Places) சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்படுவதில் அக்கறை செலுத்தப்பட வேண்டுமென்பது பற்றியும் கூறினேன்.

கேள்வி :– சென்னை மாநகரில் இரண்டு நாட்களுக்கு முன்பு ரவுடி ஒருவர் கொலை செய்யப்பட்டது பற்றி பேசினீர்களா ?

கலைஞர் :– இது போன்ற வழக்குகளில் ஜாமீனில் வெளியே வருபவர்கள் பழி வாங்கும் நோக்கத்தோடு வருகிறார்களா என்பதை அறிந்து அதற்கேற்ப முன் கூட்டியே எச்சரிக்கையாக இருக்க வேண்டிய அவசியம் பற்றி யெல்லாம் விவாதிக்கப் பட்டது.

கேள்வி :– புதிதாக காவல் துறைக்கு 100 ஹூண்டாய் கார்கள் வழங்கப்பட நீங்கள் தான் காரணம் என்று கேள்விப்பட்டோம். அதன் பயன் எவ்வாறு உள்ளது ?

கலைஞர் :– சென்னையிலே முதலாவதாகவும், அடுத்து சென்னையைத் தொடர்ந்து கோவை, மதுரை, திருச்சி, சேலம், நெல்லை போன்ற மாநகராட்சி பகுதி களிலும் சட்டம் ஒழுங்கு போக்குவரத்தைப் பாதுகாக்க போலீஸ் துறையினருக்கு வசதியாக உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் அந்தக் கம்பெனியினரே முன் வந்து 100 கார்களை சென்னைக்காக வழங்கியிருக்கிறார்கள். மற்ற நகரங் களுக்கும் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள்.

கேள்வி :– பொதுவாக உங்களுக்கு சட்டம் ஒழுங்கு திருப்தியாக இருக்கிறதா ?

கலைஞர் :– தற்போது திருப்தியாக இருக்கிறது. இன்னும் சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற்காகத் தான் அதிகாரிகளை யெல்லாம் அடிக்கடி அழைத்துப் பேசுகிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் தெரிவித்தார்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை